2016 ஜனவரி 22]

30—

ஆரம்ப சுகாதார நிலையம்

***55138—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கச்சநகரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவுலகின் பொன்மனமாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கக்கூடிய கச்சநகரம் கிராமம், விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினாலும், ஏற்கெனவே, மக்கள்தொகைக்கேற்ப அந்த ஒன்றியத்திலே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்லமுறையிலே செயலாற்றி வருகின்ற காரணத்தினாலும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கச்சநகரம் கிராமத்தைச் சுற்றி கச்சநகரம், கொத்தாங்குடி, தாங்கல், சித்தாயனூர், கொளப்பாடு ஆகிய ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிகளில் சுமார் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்கள், நீண்ட தொலைவில் இருக்கிற நீர்மலை ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது வலிவலம் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது திருக்குவளையில் உள்ள வட்டார மருத்துவமனை இவற்றிற்குச் சென்றுதான் மருத்துவ சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய நிலை*

இருக்கிறது. ஆகவே, கச்சநகரம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டால், 15,000 கிராம மக்களும் சிரமமின்றி மருத்துவ சிகிச்சையை எளிதில் பெற முடியும். எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்து, கச்சநகரம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பொதுமக்கள் எளிதிலே மருத்துவ சிகிச்சை பெற வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு இந்த நான்கரை ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 134 கோடி ரூபாயிலே மிகச் சிறப்பாகத் திறந்து, நல்லமுறையிலே அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் நீண்ட தொலைவு செல்ல வேண்டியிருக்கிறது என்று சொன்னார். கச்சநகரத்திலிருந்து வலிவலம் ஆரம்ப சுகாதார நிலையம் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. நீங்கள் குறிப்பிடுகின்ற கச்சநகரம் கிராமத்திலிருந்து திருவாரூர் மருத்துவக் கல்லூரி 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மேலும், தேமங்கலம் என்ற ஊருக்கு கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கேற்ப அமைத்துக் கொடுத்து அதைத் திறந்தும் வைத்திருக்கிறார்கள். வருங்காலங்களிலே, மக்கள்தொகைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்த கச்சநகரமும் கவனத்தில்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்*

2016 ஜனவரி 22]

அவர்களுக்கு ஒரு தகவல். தாங்கள் சொல்லியிருக்கிற அந்த தேமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் என்னுடைய தொகுதியில் இல்லை. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் தொகுதியில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் கிராமத்தில் இயங்கி வந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் நீண்டநாள் விருப்பத்தை இம்மாமன்றத்தில் தொடர்ந்து கோரிக்கையாக வைத்துள்ளேன். தாங்களும் இதுகுறித்து ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறீர்கள். இந்த நிலையில், திடீரென்று மேற்படி ஊராட்சி ஒன்றிய மருந்தகம் மூடப்பட்டுவிட்டது. இதனால் இப்பகுதி மக்களுக்கு மருத்துவ சிகிச்சை கிடைப்பதில் மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுமென்று நான் உங்களிடம் கோரிக்கை வைத்து வருகிறேன். இந்த நிலையில், இருக்கும் அந்த மருந்தகத்தையும் மூடியிருப்பது அந்தப் பகுதி மக்களிடம் மிகப் பெரிய கேள்வியை எழுப்பியிருக்கிறது. ஏன் மூடினார்கள் என்றே தெரியவில்லை. ஆகவே, உடனடியாக அந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தைச் செயல்பட வைக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, கீழையூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-20

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எழுதிக் கொடுத்த கேள்வியிலேயே, 'கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கச்சநகரம் கிராமத்தில்' என்றுதான்

எழுதிக் கொடுத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த ஊராட்சி ஒன்றியத்தின்கீழே ஏற்கெனவே செயல்பட்டு வந்த* dispensaries *எல்லாவற்றையுமே ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு முடிவெடுத்து, அதிலே சாத்தியக்கூறுகள் இருந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற ஊராட்சி ஒன்றியத்தினுடைய அந்த மருந்தகத்தையும் அடுத்த சுற்றிலே ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிக்கை அளித்தல்

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கின்ற உரிமைக் குழுவின் அறிக்கையை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இன்னும் உரிமைக் குழுவின் அறிக்கையை வைக்கவில்லை. அதற்குள் நீங்கள் எழுந்து*